மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அநேகமாக இருக்கிற அர்ச்சகர்களுக்கு இரண்டு மொழிகள்தான் தெரியும். வருகிறவர்கள் அவரவர்கள் மொழியிலே ஆண்டவனை அர்ச்சித்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக்குறிக்கும்.]

(2) ஒத்திவைப்புத் தீர்மானம்

குடியாத்தத்தில் ஏற்பட்ட தீ விபத்தும் அதன் விளைவுகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பொன்னப்ப நாடார் அவர்கள்—

'The big tire accident in Gudiyatham, North Arcot district, resulting in the death of five persens including some children and loss to the property to the time of several lakhs of rupees,.

என்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதே போன்று திரு ஜேம்ஸ் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். திரு பொன்னப்ப நாடார் அவர்கள் அது எப்படி அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிப்பதற்குரியது என்பது பற்றி விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, அண்மையில் ஒரு பெரிய தீ விபத்தின் காரணமாக குடியாத்தம் பகுதியிலே வட ஆற்காடு ஜில்லாவில் விபரீத விளைவு ஏற்பட்டிருக்கிறது. இது அண்மையில் நடந்த நிகழ்ச்சி. குறிப்பாக, உயிரிழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஐந்து பேர்கள் இறந்துவிட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. அதில் ஒரு சில குழந்தைகளும் உட்பட்டிருப்பதாகத் தகவல் இருக்கிறது. அது மட்டுமின்றி லட்சக்கணக்கான மதிப்புள்ள பொருள்கள் சேதம் அடைந்திருக்கின்றன. நிரம்ப குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ இரண்டாயிரம் குடும்பங்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலைமையில் அவர்களுக்கு நல்ல முறையில் உதவி செய்தால் தான், நிவாரணம் அளித்தால் தான் பாதுகாக்க முடியும். ஏற்கெனவே கொடுப்பது மாதிரி 80 ரூபாய் என்ற முறையில் உதவி கொடுத்தால் போதாது. கொஞ்சம் கூடுதலாகக் கொடுக்க வேண்டும். பெருவாரியான மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதால் உடனடியாக நிவாரணம் அளிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். இது முக்கியமான விஷயமாக இருப்பதால் அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, குடியாத்தத்தில் இந்த பயங்கரமான தீ விபத்து நேற்றைய தினம் ஏற்பட்டு உடனடியாக மாவட்டத்திலே உள்ள அதிகாரிகள், அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் நண்பர் துரைசாமி ஆகியோர் எங்களோடு தொடர்பு கொண்டு விவரங்களை கூடுமான வரையில் எடுத்துக்

1974 மார்ச் 11] [டாக்டர் மு. கருணாநிதி]

கூறி இருக்கிறார்கள். நேற்றைய தினம் பிற்பகல் 3 மணி அளவில் இந்தத் தீ விபத்து ஆரம்பமாகி இருக்கிறது. இந்த விபத்தை உடனடியாகத் தவிர்ப்பதற்கு வாணியம்பாடி, வேலூர், குடியாத்தம், ஆம்பூர் ஆகிய நகரங்களிலுள்ள தீயணைப்பு வண்டிகள் அந்த இடத்திற்கு விரைந்து சென்றிருக்கின்றன.

ஆயினும், நெசவாளர்கள், நகரசுத்தி தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிற அளவுக்கு ஏறத்தாழ 500 வீடுகள் தீயினால் பாதிக்கப்பட்டன என்கின்ற விவரம் இதுவரையில் அரசுக்கு வந்துள்ளது. அது மாத்திரமல்லாமல் அங்கப்ப முதலியார் என்ற 70 வயது முதியவர் ஒருவரும் 60 வயதுள்ள அவருடைய துணைவியாரும், 25 வயதுள்ள சந்திரன் என்ற ஒருவரும், இரண்டு குழந்தைகளும் ஆக மொத்தம் 5 பேர் இந்தத் தீயினால் இறந்து கருகிவிட்டார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது.

மற்ற விவரங்களை அறிவதற்கு அதிகாரிகளும், மற்றவர்களும் ஒவ்வொரு இல்லமாகச் சென்று இரவு முதல் இதுவரையில் தங்களுடைய ஆய்வுகளை நடத்தி வருகிறார்கள். இந்த விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்ற உடனடி நிவாரணங்களை மாவட்ட ஆட்சித் தலைவரும் வேறு அதிகாரிகளும் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், மற்றக் கட்சி நண்பர்களும் வேக வேகமாகச் செயல்பட்டு நிவாரணங்களை அளித்து வருகிறார்கள். என்ற சேதியும் எனக்கு வந்துள்ளது.

அங்குள்ள மூன்று உயர்நிலைப் பள்ளிகளில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உணவு வழங்குகின்ற ஏற்பாடும், உறையுள் வழங்குகின்ற ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது. இருபதுக்கு மேற்பட்டவர்கள் காயமுற்றிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் உடனடியாக மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு உடனடி சிகிச்சைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

தீ விபத்திற்குக் காரணம் எதிர்பாராமல் நடந்தது என்று ஊகிக்கப்படுகிறது. ஒருவருடைய வீட்டுக்குப் பக்கத்திலே ஏற்பட்ட ஒரு சிறு தீச் சுழலின் காரணமாக எங்கும் பரவி இத்தனை பெரிய பயங்கரமான விபத்து விளைவிக்கப்பட்டிருக்கிறது என்ற தகவல் வந்திருக்கிறது. மேலும் தகவல்களை அறிந்து எவ்வளவு இழப்பு ஏற்பட்டிருக்கும் என்ற கணக்குகள் எல்லாம் தெரிந்து உடனடியாக அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்ற அதிகாரிகளும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இதுபற்றி மேலும் விவரங்களை அறிந்து அந்தப் பகுதி மக்களுக்கு ஆவன செய்ய இப்போது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் குடியாத்தம் செல்ல இருக்கிறார்கள். இன்னும் சில நிமிட நேரங்களில் அவர்கள் இங்கிருந்து புறப்பட இருக்கிறார்கள். அதற்கிடையே கலெக்டர் தலைமையில் நிவாரணக் குழுவை அங்கே அமைத்து அந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

எவ்வளவு சேதம், எப்படி உதவிகள் செய்ய வேண்டுமென்ற முறைகளை வகுப்பதற்கு முன்பு உடனடியாக, முதல் கட்டமாக உதவிகளைச் செய்வதற்காக முதலமைச்சர் நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது, அளிக்கப்படுகிறது என்பதையும் தெரிவித்து இதுபற்றி அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்துப் பேச வேண்டிய அவசியம் இல்லையென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு என்னுடைய அனுமதியை மறுக்கிறேன்.

(3) அமைச்சரின் அறிக்கை.

கேரள மாநிலத்திற்கும், தமிழகத்திற்கும் இடையே நதி நீர்ப் பிரச்னைகள் குறித்து நடந்த பேச்சு வார்த்தைகளின் விவரங்கள் குறித்து பொதுப்பணித் துறை அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நமது மின் துறை அமைச்சர் மாண்புமிகு ஒ. பி. இராமன் அவர்களும், நானும் தலைமைச் செயலாளர் இதர அதிகாரிகளோடும், திருவனந்தபுரத்தில், கேரள மாநிலத்திற்கும் தமிழகத்திற்கும் இடையில் இருந்து வந்த நதி நீர் பிரச்சனைகள் குறித்து 8—3—1974 தேதி அன்று நடத்திய பேச்சு வார்த்தைகளின் முழு விவரங்களை இந்த அவைக்கு அறிவிக்கின்றேன். கேரள மாநிலத்தின் சார்பில், அம்மாநிலத்து முதல்வர் அவர்களும், பொதுப்பணித் துறை, மின் துறை அமைச்சர்களும், தங்கள் தலைமைச் செயலாளர் இதர அதிகாரிகளோடும் கலந்து கொண்டார்.

(1) பாண்டியார் புன்னபுழா திட்டம் :—

1965-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் தமிழ்நாடு அரசிற்கும் கேரள அரசிற்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி மேற்கு முகமாய் ஓடும் பாண்டியார் புன்னபுழா ஆறுகளில் அணைகள் அமைத்து 14 ஆயிரம் மில்லியன் கன அடி தண்ணீரைக் கொண்டு 442 மில்லியன் யூனிட் மின் சக்தி உற்பத்தி செய்து, தண்ணீரை முறையாக கேரளாவுக்கு விட்டு விடுவதென்று முடிவு எடுக்கப்பட்டது. அந்த தண்ணீரைப் பயன்படுத்தி இரு அரசுகளும் இணைந்து சோழாட்டிபுழாவில் மின்சக்தி உற்பத்தி செய்து சமமாக பங்கு கொள்வதற்கும் 1965-ம் ஆண்டு ஒப்பந்தத்தில் வழிவகை செய்யப்பட்டிருந்தது.

பாண்டியாறு புன்னபுழா தண்ணீரை மோயாற்றுக்குள் திருப்பி பவானி வடிகால் பகுதிக்கு வரும்படி செய்தால் கோவை மாவட்டத்தில் வறண்ட பகுதிகளுக்கு பாசன வசதி வழங்கலாமென்று, கோவை மாவட்ட விவசாயிகள் அரசுக்கும் மதிப்பீட்டு குழுவிற்கும் முறையீடு செய்திருந்தனர். மதிப்பீட்டுக் குழு அதன்பேரில் பாண்டியாறு புன்னபுழா தண்ணீரை கீழ்ப் பக்கமாக திருப்புவது குறித்து அரசு கவனிக்குமாறு பரிந்